**மொனறாகல மாவட்டத்தின் 18 கமநல சேவை செயற் குழுக்களின் - 2022**

---

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

**1.1** மொனறாகல மாவட்டத்தின் 18 கமநல சேவை செயற்குழுக்களின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசெயலாற்றல் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுடனான குறிப்புக்கள், பொழிப்புடனான முக்கிய கணக்கீட்டு கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 2000 இன் 46 கொண்ட கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஏற்பாடுகள் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** மொனறாகல மாவட்டத்தின் 18 கமநல சேவை செயற் குழுக்களில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முனைப்பழியுள்ளதாக்கப்பட்ட அபிப்பிராயமொன்றை வெளிப்படுத்துவதற்கு காரணமாகியிருந்த பொருன்மையான தவறுகள் 1.3 ஆம் பந்தியின் கீழ் காண்பிக்கப்படகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்.

### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் உள்ளடங்களாக கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணங்காமைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கமநல வங்கி கமநல சேவை செயற்குழுவின் அலகொன்றான போதும் 18 கமநல சேவை செயற்குழுக்களினதும் இணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இணைந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். | இணைந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | மொனறாகல கமநல சேவை செயற்குழுவின் நிலையான சொத்துக்களின் கொள்வனவு விலை, திரண்ட பெறுமானத் தேய்வு மற்றும் தேறிய பெறுமானம் ஆகிய பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டு இருக்காததுடன், அவற்றின் கிரயம், ஆண்டின் சேர்ப்பனவுகள், வெளியேற்றல்கள், வருடாந்த பெறுமானத் தேய்வு மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு மற்றும் தேறிய பெறுமானம் வெவ்வேறாக காண்பிக்கப்படும் வகையில் அட்டவணைகள் நிதிக்கூற்றுக்களுடன் சமர்பிக்கப்படவில்லை. | ஆவணங்களை சரியாக தயாரித்து சமர்ப்பிக்கிறேன். | அவதானிப்பில் காட்டப்படும் விபரங்கள் உள்ளிட்ட அட்டவணையை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்க வேண்டும். |

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 15 கமநல சேவை நிலையங்களில் மத்திய நிலையங்கள் அமைந்துள்ள காணிகளின் | எதிர்காலத்தில் மதிப்பிட்டு கணக்கு | செயற்குழுவிற்கு சொந்தமான |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அறிக்கைகளில் உள்ளடக்குகிறேன். | காணிகளின் சரியான உரிமையை உறுதி செய்து கொண்டு பெறுமதிகளை கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | 2016, 2017 மற்றும் 2021 ஆண்டுகளில் 07 கமநல சேவை செயற்குழுக்களிற்கு மொனறாகல கமநல அபிவிருத்தி ஆணையாளர் அலுவலகத்திலிருந்து கிடைத்த 33 உபகரண அலகுகள் மற்றும் 02 கமநல அமைப்புக்களிலிருந்து அன்பளிப்பாக கிடைத்த 16 உபகரண அலகுகளை மதிப்பிட்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | அந்த உபகரணங்களை நிலையான சொத்தாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | செயற்குழுவிற்கு கிடைத்த அனைத்து சொத்துக்களின் பெறுமதிகளையும் மதிப்பிட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க வேண்டும். |
| (இ) | அளுத்வெவ கமநல சேவை செயற்குழுவின் 2002 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை கமநல வங்கியிலிருந்து செயற்குழுவிற்கு கிடைக்க வேண்டிய இலாபப் பங்கு ரூபா 573,910 தொகை நிதிக்கூற்றுக்களில் விடுபட்டிருந்ததுடன், அதன் காரணமாக நிதி நிலைமை கூற்றில் நடைமுறை சொத்துக்கள் மற்றும் திரண்ட நிதியம் அப் பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | கிடைக்க வேண்டிய இலாபப் பங்கு தொடர்பாக சரியாக கணக்கு வைக்க வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் 04 கமநல சேவை செயற் குழுக்களினால் பேணியிருந்த 12 நிலையான வைப்புகளிற்காக கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 597,545 தொகை கணக்கீடு செய்யப்படாததால் அப் பெறுமதியால் ஆண்டின் மிகை மற்றும் நடைமுறை சொத்துக்கள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன. | தவறுதலாக குறைத்து கணக்கிட்டுள்ளதனை எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | நிலையான வைப்பு வட்டியையும் உள்ளடக்கி சரியாக கணக்குகளை தயாரிக்க வேண்டும். |
| (உ) | கிரயம் அல்லது தேறிய பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதியின் மீது இருப்புக்களின் பெறுமானம் காட்டப்பட வேண்டிய போதும், 10 கமநல சேவை செயற்குழுக்களில் எவ்வித விற்பனை பெறுமதியும் அற்ற காலாவதியாகியிருந்த கூட்டுத் தொகை ரூபா 2,876,013 ஆன இருப்புப் பெறுமதி நிதி நிலைமை கூற்றில் எஞ்சிய இருப்பாக உள்ளடக்கப்பட்டு இருப்பதால் அப்பெறுமதியால் போலியான சொத்துக்கள் காட்டப்பட்டிருந்தன. | பெறுமதியை புத்தகங்களில் இருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கிறேன். | காலாவதியாகி இருந்த இருப்பு தொடர்பில் பராதீன நடவடிக்கை மேற்கொண்டு நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்க வேண்டும். |
| (ஊ) | 02 கமநல சேவை செயற் குழுக்களிற்கு உரியதாக பெறுமானத் தேய்விட்டு புத்தகங்களிலிருந்து அகற்றியிருந்த | சொத்துக்களை மீண்டும் மதிப்பிட்டு கணக்கீடு செய்ய | குறித்த சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்ய |

| | | | |
|---|---|---|---|
| | போதும் தற்போதளவிலும் பயன்படுத்தப்பட்டு வரும் ரூபா 664,000 ஆன நிலையான சொத்துக்களை மீள்மதிப்பிட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கிறேன். | வேண்டும். |
| (எ) | கதிர்காமம் கமநல சேவை செயற்குழுவிற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் இருந்து 02 கடையறைகளை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொண்டதற்காக அந்நிறுவனத்திற்கு செலுத்தியிருந்த ரூபா 702,240 ஆன ஆரம்ப தொகையை நடைமுறையல்லா சொத்தொன்றாக கணக்கீடு செய்து அப்பெறுமதியின் மீது மீளாய்வாண்டிற்காக ரூபா 35,112 தொகை பெறுமானத் தேய்வு ஒதுக்கம் ஏற்பாடு செய்ததன் காரணமாக ஆண்டின் பற்றாக்குறை அப் பெறுமதியால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | கணக்குகளை சரியாக தயாரிக்க வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டில் ஆரம்பிக்கப்பட்ட நிலையான வைப்பு ரூபா 1,300,000 தொகை நிதிப் பாயச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காண்பிக்க வேண்டிய போதும், அது நிதி நடவடிக்கைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரியாக கணக்கு முறைமையை பின்பற்றுகிறேன். | கணக்குகளை சரியாக தயாரிக்க வேண்டும். |
| (ஐ) | 03 கமநல சேவை செயற்குழுக்களிற்கு உரியதாக ரூபா 533,939 ஆன கிடைக்க வேண்டிய 43 கணக்கு மீதிகள் மற்றும் 04 கமநல சேவை குழுக்களிற்கு உரியதாக ரூபா 667,962 ஆன செலுத்த வேண்டிய 38 கணக்கு மீதிகள் மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் இருந்து பதிவழிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக முறையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | செயற்குழுவின் அங்கீகாரத்துடன் பதிவழித்துள்ளதுடன் முறையான அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். | முறையான அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர் கணக்கு மீதிகளை புத்தகங்களில் இருந்து அகற்ற வேண்டும். |
| (ஒ) | 3 கமநல சேவை செயற் குழுக்களிற்கு உரியதாக ரூபா 560,440 பெறுமதியுடனான போலியான 04 பொறுப்பு மீதிகள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | போலியான பொறுப்புக்கள் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டப்பாட்டு கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 08 கமநல சேவை செயற்குழுக்களிற்குரியதாக 13 கணக்கு | சரிசெய்ய நடவடிக்கை - | நிதிக்கூற்றுக்களி ல் |

| | | |
|---|---|---|
| மீதிகளில் நிதிக்கூற்றுக்களில் காண்பித்திருந்த பெறுமதி மற்றும் நேரொத்த அறிக்கை பிரகாரம் காண்பித்திருந்த பெறுமதிகளிற்கு இடையில் ரூபா 10,652,869 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | எடுக்கிறேன். | காண்பிக்கப்படும் மீதிகள் மற்றும் நேரொத்த அறிக்கை பிரகார மீதிகள் சரியாக செம்மையாக்கப்பட வேண்டும். |

**1.3.4 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள தொடர்பான விபரங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஜுன் 17 திகதிய இலக்கம் 11/2018 கொண்ட கமநல அபிவிருத்தி ஆணையாளரின் சுற்றறிக்கை மற்றும் 2018 மே 17 திகதிய இலக்கம் 7/5/2-1/2(i) கொண்ட கமநல அபிவிருத்தி ஆணையாளரின் கடிதம் பிரகாரம் ரூபா 50,000 ஆன நிதி எல்லையை விஞ்சி வங்கி கணக்குகளிலிருந்து பணம் மீள்பெறல் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ள வேண்டிய போதும், 2 கமநல சேவை குழுக்களில் 6 சந்தர்ப்பங்களில் ரூபா 19,484,328 தொகையை செலுத்தும் போது அவ்வாறு அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகளை மேற்கொள்ளாதிருக்க நடவடிக்கை எடுக்கிறேன். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.3.5 தொங்கள் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 2 கமநல சேவை செயற்குழுக்களிற்குரியதாக 17 ஆண்டுகளிற்கு முன்னரிலிருந்து முன்கொண்டு வரப்படும் தொங்கல் கணக்கு செலவு மீதிகள் ரூபா 203,469 இனை தீர்த்திருக்கவில்லை. | தொங்கல் கணக்கு மீதிகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | தொங்கல் கணக்குகளில் காணப்படும் மீதிகளை சரிசெய்ய வேண்டும். |

**1.3.6 கணக்காய்விற்கு எழுத்து மூல சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 18 கமநல சேவை செயற்குழுக்களில் ரூபா 55,290,329 ஆன சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம், செலவுகள் மற்றும் உரிமைகளின் கூட்டுத்தொகை 93 மீதிகளிற்குரியதாக அவற்றை உறுதி செய்து கொள்வதற்கான எழுத்துமூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் மீதி உறுதிப்பாடுகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். | கணக்கு மீதிகளை உறுதி செய்து கொள்வதற்குரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2000 இன் 46 இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 53(4) பிரிவு | கமநல சேவை நிலையங்களில் காணி உரிமை பெயர் பதிவேட்டை ஒவ்வொறு 03 ஆண்டுகளிற்கும் ஒரு முறை மீள்திருத்தம் செய்து கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தினால் பரிசோதித்து உறுதி செய்ய வேண்டிய போதும், மெதகம கமநல சேவை செயற்குழுவில் 2016 இன் பின்னரும், பிபில கமநல சேவை செயற்குழுவில் 2019 ஆண்டின் பின்னர், அதனை மீள்திருத்தம் செய்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் மீள்திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | காணி உரிமை பெயர் பதிவேட்டை விரைவில் மீள்திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | நிதிப் பிரமாணம் 316 | பணம் மற்றும் பணப் பெறுமதியுள்ள பதிவேடுகளை பேணிக் கொள்ள பாதுகாப்பான தந்தப்பேழை பெட்டியொன்றை பயன்படுத்த வேண்டிய போதும், மூன்று கமநல சேவை குழுக்கள் அதற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தந்தப்பேழை பெட்டியொன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். | பணம் மற்றும் நிதியல்லா ஆவணங்களின் பாதுகாப்பிற்காக பாதுகாப்பு தந்தப்பேழை பெட்டியொன்றை பயன்படுத்த வேண்டும். |
| (இ) | 2006 அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவை | | | |
| | 8.9 (ஆ) பிரிவு | ரூபா 500,000 யை விஞ்சி பண்டங்கள் அல்லது சேவைகளை கொள்வனவு செய்வதற்காக முறையான | எதிர்காலத்தில் சரியாக நடவடிக்கை எடுக்கிறேன். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டிய போதும், மொனறாகல மாவட்ட உதவி ஆணையாளர் அலுவலகத்தினால் கமநல வங்கிகளில் பயன்பாட்டிற்காக ரூபா 3,846,600 ஆன 14 கணனி இயந்திரங்களை கொள்வனவு செய்யும் போது அந்த ஏற்பாடுகளிற்கு இணங்க வழங்குனர் நிறுவனத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திட நடவடிக்கை எடுத்திருக்வில்லை. | | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | கமநல அபிவிருத்தி ஆணையாளரின் 1981 ஒக்டோபர் 16 திகதிய இலக்கம் 107 கொண்ட சுற்றறிக்கை | | | |
| (i) | 30 (1) பந்தி | செயற்குழுவிற்கு சொந்தமான இருப்பு, பணம், பண்டங்கள் மற்றும் ஏனைய அனைத்து கற்புலனாகும் சொத்துக்கள் செயலாளரினால் நிதியாண்டு இறுதியில் குறைந்த பட்சம் குழுவின் ஒரு அங்கத்தவர் உள்ளடங்களாக பரீட்சித்துப் பார்த்து உறுதி செய்து கைச்சாத்திட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரியாக நடவடிக்கை எடுக்கிறேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 30 (2) பந்தி | சொத்துக்கள் மற்றும் கடன் மீதிகளை உறுதி செய்ய கடன்படுனர்கள் மற்றும் கடன் கொடுனர்களிடமிருந்து உறுதி செய்யும் சான்றிதழ் பெற்றுக் கொள்ள வேண்டிய போதும், கதிர்காமம் மற்றும் மெதகம கமநல சேவை செயற்குழுக்களில் ரூபா 306,315 ஆன 32 கடன்படுனர்களிடமிருந்தும், ரூபா 32,489,140 ஆன 32 கடன்கொடுனர்களிடமிருந்தும் உறுதிப்பாடுகளை பெற்றிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரியாக நடவடிக்கை எடுக்கிறேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் கமநல சேவை செயற் குழுக்களின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 9,530,611 மிகையொன்றானதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,825,337 தொகையாக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 6,705,274 ஆன வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வளர்ச்சிக்கு கமநல சேவை குழுக்களின் கடந்த ஆண்டுகளை விட மீளாய்வாண்டில் செயற்பாட்டு நடவடிக்கைகள் அதிகரித்தமை காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 06 கமநல சேவை செயற் குழுக்களிற்குரியதாக 08 ஆண்டுகள் முதல் 16 ஆண்டுகள் வரை ரூபா 7,097,850 ஆன இருப்பு, நிதிப் பற்றாக்குறை மற்றும் 08 நட்டங்கள் தொடர்பாக கணக்காய்வு திகதியான 2023 மே 23 திகதியளவிலும் பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு நிதிப்பிரமாணம் 156 இல் குறிப்பிடப்படும் ஏற்பாடுகள் பிரகாரதம் பற்றாக்குறையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆரம்ப புலனாய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பணம் அறவிடுவதற்காக கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு பற்றாக்குறையை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிதிப் பற்றாக்குறை மற்றும் நட்டங்களை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் 2021 ஆண்டில் தரிசு வயல்களை மற்றும் சிறு வடிகால்களை திருத்தும் கருத்திட்டத்தின் கீழ் மெதகம கமநல சேவை நிலைய அதிகார பிரதேசத்திற்கு சொந்தமான 02 சிறு அணைக்கட்டுக்களை மறுசீரமைக்க ரூபா 3,417,687 செலவிடப்பட்டிருந்த போதும், நிர்மாணித்திருந்த சிறு அணைக்கட்டு மற்றும் கால்வாய்களை பயன்படுத்தாது உரிய பராமரிப்பின்றி புற்கள் முளைத்திருந்ததுடன் அவற்றை தொடர்ச்சியாக பராமரத்து பிரயோசனமான வகையில் பயன்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரியாக நடவடிக்கை எடுக்கிறேன். | செலவிட்ட தொகைக்கு உரிய பொருளாதார பெறுமதியை வழங்க நடவக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கதிர்காமம் கமநல சேவை செயற் குழுவினால் கடந்த ஆண்டில் குழு நியத்திலிருந்து ரூபா 879,008 | ஏற்றுக் கொள்கிறேன். எதிர்காலத்தில் நிலையத்தை திருத்தும் | முறையான திட்டமின்றி செயற்பட்டதனால் |

| | | |
|---|---|---|
| செலவில் குழுக் கட்டிடத்தை திருத்தியிருந்ததுடன், பின்னர் முழுக் கட்டத்தையும் உடைத்து அகற்றி மீளாய்வாண்டு இறுதியில் புதிய குழுக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. முறையான திட்டமின்றி திருத்த வேலைகளை செய்ததனால் கட்டிட திருத்தத்திற்காக கடந்த ஆண்டில் செலவிட்டிருந்த ரூபா 879,008 ஆன தொகை விளைவற்ற செலவொன்றாக அவதானிக்கப்பட்டது. | போது திணைக்கள ஏற்பாடு கிடைக்கின்றதா என பரீட்சித்துப் பார்த்து குழு நிதியத்தின் மூலம் திருத்த வேலைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். | ஏற்பட்ட விளைவற்ற செலவு தொடர்பாக பொருத்தமானவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 1993 முதல் 2021 வரை நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்படும் 13 கமநல சேவை செயற் குழுக்களிற்குரிய ரூபா 7,884,878 பெறுமதியான கிடைக்க வேண்டிய 325 கணக்கு மீதிகளை அறவிட மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் கமநல சேவை அபிவிருத்தி ஆணையாளரின் ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்கிறேன். | கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1989 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்படும் 15 கமநல சேவை செயற் குழுக்களிற்குரிய ரூபா 13,238,595 பெறுமதியான செலுத்த வேண்டிய 41 கணக்கு மீதிகளை தீர்க்க மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் தீர்க்க நடவடிக்கை எடுக்கிறேன். | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 03 கமநல சேவை செயற் குழுக்களில் 1989 முதல் 2010 வரை 11 அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 579,546 தொகையை அறவிட மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் ஆலோசனை பிரகாரம் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிட வேண்டிய மீதிகளை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 04 கமநல சேவை செயற் குழுக்களினால் 1999 முதல் 2020 வரை 08 நலன்பெறுனர்களிடம் இருந்து அறவிட்டிருந்த ரூபா 2,147,060 தொகையை மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதி வரை மாவட்ட அலுவலகத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரியாக சீராக்க நடவடிக்கை எடுக்கிறேன். | அனுப்ப வேண்டிய பெறுமதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) கமநல சேவை அபிவிருத்தி ஆணையாளரின் இலக்கம் 04/2012 மற்றும் 2012 பெப்ரவரி 29 திகதிய கமநல வங்கி சுற்றறிக்கையின் 2.6.2 பிரிவின் பிரகாரம் பிரிவுப் பொறுப்பு விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி அலுவலர்களினால் பின்வரும் விடயங்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த போதும், அவ் விடயங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.<br><br>(i) கடன்கள் தொடர்பில் முறையான ஒழுக்கமொன்றை பேணிக்கொள்ளல்.<br><br>(ii) கமநல அமைப்புகளில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கடன் உப குழுவின் செயலாளராக செயற்படல் மற்றும் அதன் கடமைப் பணிகளிற்கு பொறுப்புக் கூறல்.<br><br>(iii) பிரிவின் விவசாயிகள் மற்றும் கமநல வங்கிகளிற்குரிய தரவுத் தொகுதியொன்றை நாளாதுவரையாக பேணிச் செல்லல்.<br><br>(iv) பிரிவின் விவசாயிகளின் கடன் தேவைப்பாட்டை இனங்காணல், அவற்றை பூரணப்படுத்த ஆலோசனை வழங்குதல், வழிகாட்டுதல் மற்றும் உரிய காலத்தில் கடனை அறவிடல்.<br><br>(v) பிரிவின் விவசாயிகளிற்கு வழங்கியுள்ள கடன்களை கால நேரத்திற்கு அறவிடல். | எதிர்காலத்தில் சரியாக நடவடிக்கை எடுக்கிறேன். | கமநல சேவை அபிவிருத்தி ஆணையாளரின் இலக்கம் 04/2012 மற்றும் 2012 பெப்ரவரி 29 திகதிய கமநல வங்கி சுற்றறிக்கையின் 2.6.2 பிரிவின் பிரகாரம் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள் செயற்பட வேண்டும் |
| (ஊ) பிரிவுப் பொறுப்பு விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி அலுவலர்களின் செயலாற்றுகையை மதிப்பிடல் தாபன விதிக்கோவையின் VII பிரிவின் பிரகாரம் மேற்கொள்ள வேண்டியதுடன், அலுவலரின் செயலாற்றுகையின் மீது அவரால் வருடாந்த சம்பள ஏற்றத்தை ஈட்டிக் கொள்ள வேண்டும். அவ்வாறாயினும் பிரிவுப் பொறுப்பு அலுவலர்களினால் தமது திட்டவட்டமான பணிக் கடமைகளை நிறைவேற்றியிருக்காத போதும், செயலாற்றுகைகளை மதிப்பிடாது வருடாந்த சம்பள ஏற்றத்தை வழங்கியிருந்தது. | எதிர்காலத்தில் சரியாக செயற்பட நடவடிக்கை எடுக்கிறேன். | விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி அலுவலர்களின் செயலாற்றுகை தொடர்பாக தாபன விதிக்கோவையின் VII பிரிவின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |

3.4 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்தினால் மண் ஆராய்சி அலகிற்கு 2019 ஆண்டில் 50 சதுர மீற்றர் அளவான கட்டிடமொன்று மற்றும் 2017 நவம்பர் 28 திகதி குறித்த அலகிற்கு பெற்றுக் கொண்டிருந்த 98 பரிசோதனை உபகரணங்களை கணக்காய்வு திகதிய 2023 ஜுன் 15 திகதியளவிலும், அவற்றை பயன்படுத்தாது விளைவற்று காணப்பட்டன. | எதிர்வரும் ஆண்டில் நோக்கத்துடன் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கிறேன். | குறித்த கட்டிடத்தை மற்றும் பரிசோதனை உபகரணங்களை பயன்படுத்த விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் கதிர்காமத்தில் சுற்றுலா விடுதியொன்றை நிர்மாணித்து 2021 ஒக்டேர்பர் 08 திகதி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும், 2023 ஜுன் 15 திகதியளவிலும் அக் கட்டிடத்தை நோகத்துடனான செயற்பாட்டிற்கு பயன்படுத்தி இருக்காத போதும் அதற்காக இணைத்திருந்த சுற்றுலா விடுதி பொறுப்பாளரிற்கு 2022 ஒக்டோபர் 10 திகதி முதல் 2023 ஜுன் மாதம் வரை சம்பளமாக ரூபா 413,356 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | திணைக்கள எற்பாட்டின் மீது தேவையான உபகரணங்களை பெற்றுக் கொண்ட பின்னர் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன். | சுற்றுலா விடுதியை நோகத்துடனான பணிகளிற்கு விரைவில் பயன்படுத்த வேண்டும். |
| (இ) | மாவட்ட அலுவலகத்திற்கு சொந்தமான செலுத்தும் நிலையில் இல்லாத பழுதுபார்த்தல் பொருளாதார ரீதியாக ஆக்கபூர்வமற்ற 03 வாகனங்கள் தொடர்பில் தேவையான செயற்பாடுகளை மேற்கொண்டிருக்கவில்லை. | கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் வழங்கும் ஆலோசனையின் மீது செயற்பட நடவடிக்கை எடுக்கிறேன். | வாகனம் தொடர்பில் முறையான மற்றும் தகைமையுடைய அலுவலரின் மேற்பார்வைக்கு உட்படுத்தி பொருத்தமான செயற்பாடுகளை விரைவில் எடுக்க வேண்டும். |
| (ஈ) | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2016 ஜுன் 11 திகதிய இலக்கம் 10/2015 கொண்ட சுற்றறிக்கை பிரகாரம் கமநல அபிவிருத்தி குழுவிற்கு சொந்தமான விவசாய இயந்திர உபகரணங்கள் விளைவற்று வைத்திருக்கக் கூடாத போதும் 10 கமநல சேவை செயற் குழுக்களிற்கு உரியதாக பெறுமதி | எதிர்காலத்தில் ஆக்கபூர்வமாக பயன்படுத்த அல்லது திணைக்களத்தின் மூலம் வழங்கப்படும் ஆலோசனை பிரகாரம் வேறு நிலையத்திற்கு வழங்க நடவடிக்கை எடுக்கிறேன். | விளைவற்ற சொத்துக்களை விரைவில் பயன்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 6,650,049 ஆன 11 உபகரணங்களும், பெறுமதி குறிப்பிடப்படாத 36 உபகரணங்களும் விளைவற்று காணப்பட்டன. | | |
| (உ) | 06 கமநல சேவை செயற் குழுக்களிற்கு உரியதான காணிகள், 02 உத்தியோகபூர்வ இல்லங்கள், 03 விற்பனை நிலையங்கள் மற்றும் 05 கடையறைகள் பயன்படுத்தப்படாது விளைவற்று நிலவின. | எதிர்வரும் ஆண்டினுள் பொருத்தமான செயற்பாடுகளை எடுக்க நடவடிக்கை எடுக்கிறேன். | விளைவற்ற சொத்துக்களை விரைவில் பயன்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.5 கருத்திட்டம் அல்லது மூலதன வேலை தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| தனமல்வில ஹெல உணவகத்தை நிர்மாணிக்கும் வேலை 2021 ஜுலை 21 திகதி ரூபா 5,357,585 பெறுமதிக்கு தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ஒப்படைத்திருந்ததுடன் ஒப்பந்ததாரரினால் கட்டிடத்தின் அத்திவாரத்தை கட்டுதல், தூண்களை கட்டுதல் மற்றும் கழிவறை தொகுதியை நிர்மாணித்த பின்னர் 2022 மார்ச் மாதம் ஒப்பந்தம் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தது. 2023 ஜுன் 07 திகதியளவில் குறித்த கருத்திட்டத்தின் எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்ள பொறுப்புவாயந்த நிறுவனத்தினால் நடவடிக்கை எடுத்திருக்காததுடன் நிர்மாணித்திருந்த கட்டிட வளவில் புற்கள் முளைத்திருந்தன. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | செலவிட்ட நிதிக்கு பொருத்தமான பொருளாதார பெறுமதியை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.6 ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| | கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டின் கீழ் மெதகம கமநல சேவை நிலையத்தில் பசளை களஞ்சியத்தை நிர்மாணிப்பது தொடர்பாக 2023 ஜுலை 05 திகதி மேற்கொண்ட பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (அ) | மதிப்பீட்டு விடயம் இலக்கம் C – 10 கீழ் முன்பக்க முற்றத்தை கொங்கிரீட் இடும் போது 30.7 கன மீற்றர்களிற்கு | மேலதிக கொடுப்பனவை வைப்புத் தொகையில் | மேற்கொண்ட வேலைகளிற்கு மாத்திரம் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 545,969 செலுத்தியிருந்த போதும், பௌதீக பரீட்சிப்பின் போது 22.29 கன மீற்றர்கள் மாத்திரம் கொங்கிரீட் இடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கொங்கிரீட் 8.41 கன மீற்றர்கள் இடப்படாததுடன் அதற்காக ரூபா 149,563 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்ததுடன், இடப்பட்டிருந்த கொங்கிரீட் உரிய நியமத்தில் இருக்கவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது. | இருந்து அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். | கொடுப்பனவு செய்ய வேண்டியதுடன் மேலதிகமாக செலுத்தியுள்ள தொகையை அறவிட வேண்டும். மேலும் உரிய நியமத்துடனான கொங்கிரீட் கலவையை பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | களஞ்சியத்தின் பின்பக்க கதவை அமைப்பதற்காக விடய இலக்கம் 7.1 கீழ் ரூபா 61,502 செலுத்தி இருந்த போதும் கதவு பலகைகளிற்கு இடையில் இடைவெளி காணப்பட்டமை மற்றும் சட்டகம் மற்றும் கதவு உரிய முறையில் பொருந்தி இருக்காத காரணத்தால் தரமின்றி அப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | வைப்புக்களிலிருந்து மீண்டும் திருத்த நடவடிக்கை எடுக்கிறேன். | அந்த அந்த வேலை விடயங்களை தரத்துடன் மேற்கொள்ள வேண்டியதுடன் தவறு இடம்பெற்றிருப்பின் அவற்றை சுமுக நிலைக்கு ஆக்கிக் கொண்டதன் பின்னர் கொடுப்பனவு செய்ய வேண்டும். |

**3.7 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| மாவட்ட அலுவலத்திற்கு மற்றும் கமநல சேவை நிலையத்திற்கு 2022 ஆண்டு முதல் 139 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டு சேவையில் ஈடுபட்டிருந்த போதும், அதற்கான அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை. | இந்த செயற்பாடுகளை சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | சேவையில் ஈடுபட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் களை முறையாக கடமை கையளிப்பை செய்து அங்கீகார ஆளணியிளரிற்கு உட்படுத்திக் கொள்ள வேண்டும். |

**3.8 வாகனத் தொகுதி முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| கணக்காய்வு திகதிய 2023 ஜுன் 09 திகதி மேற்கொண்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது கமநல அபிவிருத்தி மாவட்ட | கமநல அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் பணிப்பின் | அங்கீகாரமின்றி செலுத்தியமை தொடர்பில் பரிசோதனை |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலகத்திற்கு சொந்தமான கெப் வண்டியொன்றின் மைலோ மாணி எண்ணிக்கை 128,193 ஆனதுடன் அது வண்டியின் தின ஓட்டக் குறிப்பு பிரகாரம் கிலோ மீற்றர் எண்ணிக்கை 126,809 ஆனதில் கிலோ மீற்றர் 1,384 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் மேற்குறித்த கெப் வண்டியின் எரிபொருள் சமப்படுத்தல் விகிதத்தின் பிரகாரம் 173 எரிபொருள் லீற்றர்கள் நிரப்பி 1,384 கிலோ மீற்றர்களான தூரம் முறையான அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தன. | பெயரில் ஒழுக்காற்று பரிசோதனை மூலம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதுடன் அத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். | ஒன்றை மேற்கொண்டு பொருத்தமானவாறு செயற்பட வேண்டும். |

**4. கமநல வங்கிகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 18 கமநல சேவை செயற் குழுகளில் 1999/2000 பெரும் போகத்திலிருந்து 2022 சிறு போகம் வரை விவசாயிகளிற்கு வழங்கியிருந்த பயிர் கடன் மற்றும் வட்டியாக அறவிட வேண்டிய ரூபா 134,187,719 ஆன தொகையை மீளாய்வாண்டு திசெம்பர் 31 திததியளவிலும் அறவிட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரியாக நடவடிக்கை எடுக்கிறேன். | விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | தெலுல்ல கமநல வங்கியின் 06 வகை சேமிப்பு கணக்குகளில் கடந்த ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் சேமிப்பு விகிதங்கள் 44 சதவீதம் முதல் 83 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்ததுடன் மகளிர் கமநல அமைப்பு சேமிப்புக் கணக்குகளில் மீளாய்வாண்டில் எவ்வித தொகையும் சேமிக்கப்பட்டிருக்வில்லை. | 20 கமநல அமைப்புக்கள் செயலற்று நிலவுவதுடன் 32 மகளிர் கமநல அமைப்புக்கள் சிறு குழுக்களை ஸ்தாபித்துக் கொண்டுள்ளதுடன் 01 சதவீதம் வட்டியின் மீது கடன் கொடுக்கல் வாங்கல் செயன்முறை ஒன்றை அவர்கள் ஆரம்பித்துள்ளனர். | கமநல வங்கியின் செயலாற்றுகையை உயர்த்திக் கொள்ள செயற்பட வேண்டும். |